**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்.**

**MCOP No: 155/2022** **நாள் 23.01.2026**

சாட்சி திவாகர் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அவர் மூலம் இன்று சாட்சிய பிரமாண பத்திரிக்கையை தாக்கல் செய்யப்பட்டு எ.ம.சா.2 ஆக 1989ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது ஏற்பாட்டின்படி கிரேடு 1 பெஞ்ச் கிளார்க் திரு.P.ஹரிகிருஷ்ணன், என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திவாகர் | தாலுகா | மதுரை |
| த-பெ | கே.பழனி | தொழில் | நிர்வாக அதிகாரி, 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் , மதுரை |
| கிராமம் | மதுரை | வயது | 25 |

**முதல் விசாரணை**

எனது சாட்சிய பிரமாண பத்திரிக்கையை பொறுத்து முதல் விசாரணை வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்**

1) TN 67 AV 9964 என்ற பயணியர் ஆட்டோவின் காப்பீட்டு நகர் நிபந்தனையுடன் கூடியது சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ.3**.

**குறுக்குவிசாரணை மனுதாரர்கள் தரப்பில்**

விபத்து நடந்த சமயத்தில் இந்த பாலிசியானது நடப்பில் இருந்தது என்றால் சரிதான். எமசாஆ.3 ஆவணத்தில் ஓட்டுநர் மற்றும் மூன்று பயணிகளுக்கு என்று தான் பாலிசி எடுக்கப்பட்டதாக உள்ளது. எங்களது கோப்புகளின் அடிப்படையில் இந்த வாகன விபத்து இழப்பீடு கோரி இந்த ஒரு மனுதாரர் தரப்பில் தான் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. காப்பீடு மற்றும் அனுமதி சீட்டு போன்றவைகள் மேற்படி வாகனத்தின் உரிமையாளருக்கும் எங்களுக்கும் இடையேயான ஒப்பந்தம் என்றால் சரிதான். எனவே அனுமதி சீட்டு பெறாமல் வாகனம் ஓட்டப்பட்டது இந்த மனுதாரர்களை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் அது சரியல்ல. விபத்து சமயத்தில் எமசாஆ.3 ஆவணப்படிக்கான பாலிசி ஊர்ஜிதத்தில் இருந்தமையால் மனுதாரர்களுக்கு

**எங்கள் நிறுவனம் தான் விபத்து இழப்பீடு தொகையை செலுத்த கடமைப்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 23rd day of January 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.